இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 265 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 24 – வியாழக்கிழமை 07 மே 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 265 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 24 - Thursday 07 May 2026 - Chennai 8 Pages ₹ 5.00

## தலைவர் மு.க.ஸ்டாலினுடன் சூப்பர் ஸ்டார் சந்திப்பு!



**சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் சந்தித்துப் பேசினார். அப்போது, "வெற்றி பெறும் நேரத்தில் மட்டுமல்ல; இக்கட்டான சூழலிலும் தி.மு.க. தலைவருக்கு உறுதுணையாக இருப்பேன்" என சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் தெரிவித்தார்.**

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று

## தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று (07-05-2026 வியாழக்கிழமை) மாலை 5.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கில்" நடைபெறும்.

அதுபோது புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 05-05-2026.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### சந்தர்ப்பவாதத்திற்குக் கொள்கை முகமூடி போடும் காங்கிரஸின் முயற்சி பல்லிளிக்கிறது!

# துரோகம் எங்களுக்குப் புதிதல்ல! காலம் பதில் சொல்லும்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கை!

**சென்னை,மே.7-**

**தி.மு.க. கூட்டணிக் கட்சி தொண்டர்களின் உழைப்பினால் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி 5 சட்டமன்ற உறுப்பினர்களை பணயம் வைத்து கயமையுடன் மாற்று இடத்திற்கு சென்றுள்ளார்கள். ஏரோ ராஜதந்திர முடிவை எடுத்ததுபோல் சந்தர்ப்பவாதத்திற்கு கொள்ளை முகமூடி போடும் காங்கிரஸின் முயற்சி பல்லிளிக்கிறது. தி.மு.க.வுக்கு துரோகம் புதிதல்ல! அவை நிரந்தரமும் அல்ல என்பது எங்களுக்குப் புரியும்! காலம் பதில் சொல்லும் என கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

**இதுகுறித்து தி.மு.கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

அகில இந்திய காங்கிரஸ் கட்சி சார்பில் வெளியாகி இருக்கும் அறிக்கை, சில காலம் மறைந்திருந்த அவர்களின் குணத்தை வெளிக்காட்டியிருக்கிறது.

**காங்கிரஸ் செய்தியால் எங்களுக்கு திகைப்பில்லை!**

எப்போதெல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு இக்கட்டான சூழலும் நெருக்கடியும் உண்டானதோ, அப்போதெல்லாம் உற்றத் தோழமையாக உடனிருந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அதற்காக நாங்கள் கொடுத்த



விலை அதிகம். ஆனால் அவற்றை இன்முகத்தோடு ஏற்றோம்.

குறிப்பாக, அன்னை சோனியா காந்தி அவர்கள், மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடன் சிறந்ததொரு நட்புணர்வையும், தனிப்பட்ட முறையில் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுடன் பாசப்பிணைப்பையுமே காட்டி வந்தோம்.

அவரும், "நான் சகோதரர் என்று அழைக்கும் ஒரே அரசியல் தலைவர் ஸ்டாலின்தான்" என்றெல்லாம் சொல்லி வந்தார்.

இன்று அவை முறிந்துவிட்டதாக காங்கிரஸ் கூறி இருப்பதை செய்திகளில் பார்த்த போது ஏனோ திகைப்பு ஏற்படவில்லை.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் பெரும்பான்மை இடங்களைப் பெற்று, தேர்தலைச் சந்தித்து, கூட்டணிக் கட்சித் தொண்டர்களின் உழைப்பால் வெற்றி பெற்ற 5 சட்டமன்ற உறுப்பினர் களைப் பணயம் வைத்து கயமையுடன் மாற்று அணிக்கு சென்றுள்ளார்கள்.

**பா.ஜ.க. செய்வதையே காங்கிரஸ் கட்சியும் செய்கிறது!**

ஏதோ பெரிய அரசியல் ராஜதந்திர முடிவை எடுத்தது போலவும் அதற்கு கொள்கை முலாம் பூசி நியாயப்படுத்த காங்கிரஸ் கட்சி முயற்சிக்கிறது. சந்தர்ப்பவாதத்துக்கு கொள்கை முகமூடி போடும் முயற்சி பல்லிளிக்கிறது. தி.மு.கழகம் தலைமையிலான ஆட்சி அமையும் என்று நம்பி வாக்களித்த மக்களுக்கு செய்த பச்சைத் துரோகம்.

குறுக்கு வழியில் அதிகாரத்தை அடைய பா.ஜ.க. பல மாநிலங்களில் எதைச் செய்கிறதோ, அதையே காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் செய்திருக்கிறது.

> **வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருப்பதே அரசியல் அறமாக இருக்கும்!**
>
> **காங்கிரஸ் கட்சி யாரை வேண்டுமானாலும் ஆதரிக்கட்டும். அது அவர்களது விருப்புரிமை. ஆனால் யாருக்கு ஆதரவளித்தாலும், வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருப்பதே அரசியல் அறமாக இருக்கும்.**

காங்கிரஸ் கட்சி யாரை வேண்டுமானாலும் ஆதரிக்கட்டும். அது அவர்களது விருப்புரிமை. ஆனால் யாருக்கு ஆதரவளித்தாலும், வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருப்பதே அரசியல் அறமாக இருக்கும்.

திரு. ராகுல்காந்தி அவர்களை பிரதமர் வேட்பாளராக அதிகாரபூர்வமாக முன்னிறுத்தி தேர்தலை சந்திக்க காங்கிரஸ் கட்சியே தயங்கிய நேரத்தில் 2019 தேர்தலில் சென்னையில் அவரை பிரதமர் வேட்பாளராக கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்த நினைவுகள் என் நெஞ்சில் பசுமையாக நிழலாடுகின்றன.

**ராகுல் காந்தியை முன்னிறுத்திய தி.மு.க.!**

இரண்டு தேர்தல்களில் திரு ராகுல்காந்தி அவர்களை முன்னிறுத்தி, அபார வெற்றியை ஈட்டித்தந்து நாட்டிலேயே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பியது தி.மு.க. கூட்டணி. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கொள்கை ரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் தோளோடு தோள் நின்ற இயக்கம் தி.மு.கழகம்.

தோல்வி எங்களுக்கு புதிதல்ல!

துரோகமும் எங்களுக்கு புதிது அல்ல!

ஆனால், அவை நிரந்தரம் அல்ல என்பதும் எங்களுக்கு தெரியும்!

காலம் பதில் சொல்லும்!

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடுள்ளார்.

### வலிமையான எதிர்க்கட்சியாக இருந்து

# தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்வோம்!

## தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உறுதி!

**சென்னை, மே 7 -**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில்தான் தொடர்வதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் , இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் உறுதிபடத் தெரிவித்துள்ளன.**

சென்னை ஆழ்வார்பேட்டை இல்லத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் மற்றும் அக்கட்சி சார்பில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் லதா, செல்லசாமி உள்ளிட்டோர் சந்தித்தனர்.

சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய பெ.சண்முகம் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்வதாக தெரிவித்தார்.

இதேபோல், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொய்தீன், அக்கட்சியின் சட்டமன்ற உறுப் பினர்கள் சையது பாரூக், ஷாஜகான், நாடாளுமன்ற உறுப் பினர் நவாஸ்கனி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அபுபக்கர் மற்றும் நிர்வாகிகளும் சந்தித்தனர்.

சந்திப்புக்குப்பின் செய்தியாளர் களிடம் பேசிய காதர்மொய்தீன், தி.மு.க. தலைமையிலான மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணியில் தான் ஐ.யூ. எம்.எல். நீடிக்கும் என்றும், மதச்சார்பற்ற சக்திகளின் ஒற்றுமை எதிர்காலத்திலும் மிக மிக அவசியம் என்றும் கூறினார்.

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், நாடாளு மன்ற உறுப்பினர் சுதீஷ் மற்றும் விஜய் பிரபாகரன் ஆகியோரும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது, எ.வ.வேலு, எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதேபோல், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மனிதநேய மக்கள் கட்சி சார்பில் நாகை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அக்கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லாவும் நேரில் சந்தித்தார்.

தொடர்ந்து, மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் சிதம்பரம் தொகுதியில் வெற்றி பெற்ற அக்கட்சி யின் தலைவர் தமிமுன் அன்சாரி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்தார். வெற்றி பெற்ற சான்றிதழ்களை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து அவர்கள் வாழ்த்துப் பெற்றனர்.

இதேபோல், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈஸ்வரன், பொள்ளாச்சி தொகுதியில் வெற்றி பெற்ற அக்கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் நித்யானந்தம் ஆகியோர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.